பதிவு எண். M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ தோற்றம்: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ.

மலர்: 20] சென்னை: ஆடி 2 (17—7—72) திங்கள் வெளியூர்: ஆடி 3 (18—7—72) செவ்வாய் [இதழ்: 28

தீண்டாமை ஒழிப்புக்குத் தனிப் போலீசு

தஞ்சை, ஜுலை 17—

தீண்டாமைப் பழக்கத்தை அகலச்செய்வதற்காகவும், தீண்டாமையைப் பின்பற்றுவோர் மீது கடும் நடவடிக்கை எடுப்பதற்காகவும் ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் தனிப் போலீசுப் படைகளை அரசு அமைத்திருக்கிறது. சென்னை நகரிலும் கூடிய விரைவில் இத்தகைய படையொன்று ஏற்படும் என்று தாழ்த்தப்பட்டோர் நல அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து அறிவித்தார்.

அண்ணனின் ஆணை பிறந்ததும் அதனை அறவழியில்
நிறைவேற்றிக் காட்டி நெஞ்சம் நிமிர்ந்த நின்றவர்களே...

வன்முறையைத் தாங்கிக்கொண்டு— அதனை நன்முறையால் வெல்வதுதான் கடினமானது

இந்தக் கடினமான காரியத்தைப் பழகிக்கொள்ள வேண்டுமென்பதுதான் கழகத்தின் கட்டளை

அண்ணனின் கதகதப்பில் வளர்ந்த நம்மை 'ஆளுங் கட்சி' என்ற மதமதப்பு எட்டிப் பார்க்கக்கூடாது

"'வன்முறை'க்குப் பதில் — 'வன்முறை' என்பது சுலபமானது — எளிதில் சாதிக்கக் கூடியது; ஆனால், 'வன்முறை'யைத் தாங்கிக்கொண்டு — அதனை, 'நன்முறை'யில் வெல்வதுதான் கடினமான காரியமாகும்; 'இந்தக் கடினமான காரியத்தைப் பழகிக் கொள்ள வேண்டும்' என்பதுதான் கழகத்தின் கட்டளை!

"'ஆளுங்கட்சியாகி விட்டார்கள்; இயற்கையாக ஆளுங்கட்சிக்கு வரக்கூடிய 'மதமதப்பு' இவர்களுக்கு வந்துவிடும்' என்று சிலர் எதிர்பார்த்தார்கள்!

"அண்ணனின் கதகதப்பில் வளர்ந்த நம்மை, 'ஆளுங்கட்சி' என்ற மதமதப்பு எட்டிப் பார்க்காது என்பதை நிரூபித்துக் காட்டிக்கொண்டே இருக்கவேண்டும்!

"'வன்முறை கூடாது' என்பது, யாருக்கோ நாம் செய்கின்ற உபதேசம் அல்ல; நாம் அதனை உணர்ந்து — அறவழி நடந்து — அதனையே பிறருக்குச் சொல்கிறோம் என்பதில் தான் நமக்குப் பெருமை — நம்மை வளர்த்த அண்ணனுக்கும் பெருமை — நாம் அமைத்த ஆட்சிக்கும் பெருமை!"

என்று கழகத் தலைவர் கலைஞர் அவர்கள், கழகத் தோழர்களுக்குக் கோடிட்டுக் காட்டி வலியுறுத்தியிருக்கிறார்; 'பெருமை எது' என்ற தலைப்பில் எழுதியுள்ள கட்டுரையில் அவர் கூறியிருப்பதாவது:—

உடன் பிறப்பே — ஓராயிரம் கூர் அம்புகள் உன்னை நோக்கிப் பறந்து வந்தாலும், 'அதனைக் கண்டு இமை கொட்டுவதும் வீரத்திற்கு இழுக்கு' என்ற உணர்வோடு நீ உலவிக் கொண்டிருக்கிறாய் என்பதை, ஜுலை 15-ம் நாளன்று ஊருக்கும் உலகிற்கும் புரியவைத்து விட்டாய்!

புயல் வீசினாலும் உன் முகத்திலே புன்னகை மறைவதில்லை! நகை சிந்தும் உதடுகளின் மேலே அரும்பு கட்டியிருக்கும் இளம் மீசையைத் தடவி விட்டுக்கொண்டே, 'புயலைப் புறங்கண்டவன் நீ' என்பதற்கு எத்தனையோ வரலாற்றுச் செய்திகள் உண்டு!

இருபதாண்டுக் காலத்திற்கு மேலாக — ஏன் — இன்னும் பல ஆண்டுகளைச் சேர்த்துக் கொள்வதும் தவறான கணக்கல்ல — எதிர் நீச்சல் போட்டு விழுப் புண்களை ஏற்றுக்கொண்டு, அடாத மழையில — ஓயாத வாடைக் காற்றில் — குன்றின் மீது அகல் விளக்கைக் கொளுத்தி வைத்து வெற்றி கண்டவன் நீ! ஆம் — பலலாயிரம் பகைவர்கள் எதிர்ப்புப் புகை கிளப்பியபோதும் — அஞ்சி நில்லாமல், அரசு அமைத்துக் காட்டிய ஆற்றல் மறவன் நீ!

'தம்பி — வா' என்று அண்ணன் அழைத்த நேரமெல்லாம் துள்ளிக் குதித்து ஓடிவந்து, ஆவேசத்தை அள்ளிவரும் பகையைத் தலைகுனியச் செய்தவன் நீ!

'என்ன கட்டளையிடுகின்றார் அண்ணன்' என்று ஏங்கித் தவமிருந்து — ஆணை பிறந்ததும் — அதனை அறவழியில் நிறைவேற்றிக் காட்டி, நெஞ்சம் நிமிர்ந்து நின்றவன் நீ!

அந்தத் துணிவு மங்கிவிடவில்லை — தூய உள்ளம் மறைந்துவிடவில்லை — உறுதி அழிந்துவிடவில்லை — உழைக்கும் திறமை பட்டுப்போய் விடவில்லை என்பதை, அண்ணனுக்குப் பிறகு — என் ஆருயிரே — நீ பல முறை எடுத்துக் காட்டியிருக்கிறாய்; என்றாலும், இந்த முறை நீ காட்டியுள்ள திறம், நினைத்து நினைத்து மகிழத்தக்கதாகும். 'எந்தக் கருத்துக்கள் வெற்றி பெற வேண்டுமென்றாலும், அந்தக் கருத்துக்களின் சொந்தக்காரர்கள் அதனை நிறைவேற்றிக்கொள்ள வன்முறையை நாடுதல் கூடாது' என்பது கழகத்தின் தலையாய கொள்கை. "கத்தியைத் தீட்டாதே — புத்தியைத் தீட்டு" என்பது நமது தலைவனின் வேதவாக்கு அல்லவா?

'வன்முறைக்குப் பதில் வன்முறை' என்பது சுலபமானது — எளிதில் சாதிக்கக் கூடியது; ஆனால், வன்முறையைத் தாங்கிக்கொண்டு அதனை நன்முறையால் வெல்வதுதான் கடினமான காரியம்; இந்தக் கடினமான காரியத்தைப் பழகிக்கொள்ள வேண்டும் என்பதுதான் கழகத்தின் கட்டளை!

நடந்து முடிந்த சில விரும்பத்தகாத நிகழ்ச்சிகள் தமிழகத்திற்கு மாசு விளைவிக்கக்கூடியவைகள் என்றால் — அதில் எங்காவது ஓரிடத்திலாவது நமது கழகத் தோழனின் பங்கும் உண்டு என்றால், அவனைச் சட்டம் தண்டிப்பது மட்டுமல்ல — அவன் தன்னைத்தானே தண்டித்துக்கொள்ளவும் வேண்டும்; இந்தப் பேருண்மையை உணர்ந்து நீ செயல்படுகின்ற காரணத்தினால்தான், கடந்த ஐந்தாம் நாளன்று, தமிழகத்தில் பிரளயமே வந்துவிட்டதென்று பேயாட்டம் போட்ட வன்முறையாளர்களை உன்னால் தோல்வியடையச் செய்ய முடிந்தது!

வன்முறைக் கூத்துக்களால் அமைதிப் பூங்காவில் அழிவினை ஏற்படுத்துவோரை, பதினைந்தாம் நாளன்று நீ அடையாளம் காட்டிய முறையினை எப்படிப் புகழ்வேன்!

'நாடெங்கும் நடைபெறட்டும் வன்முறைக் கண்டனக் கூட்டங்கள்' என்று அறிவித்ததுதான் தாமதம் — அப்பப்பா — மானபோல் குதித்து — தேன் போல் விளக்கமளித்து, உன் ஊன் கலந்து — உயிர் கலந்து நிற்கும் கழகத்திற்கு எத்துணைப் பெருமை சேர்த்துவிட்டாய்!

இடையிலே நாட்கள் குறைவென்றாலும், நீ காட்டிய ஆர்வம் — நீ கட்டிய தோரணங்கள் — எங்கே — காய்ப்பு ஏறிய உன் கையைக் கொடு — என் கண்களில் ஒத்திக்கொள்கிறேன்.

தேர்தல் நேரமா — தென் தமிழகத்தின் தீர்ப்பு என்ன என்று திக்கெட்டுமுள்ள நாடுகள் ஆவல் காட்டுகின்றனவா — அங்கெல்லாம் வானில் மிதந்து செல்கின்ற முகில் கூட்டங்களின் முதுகில் வெற்றிச் செய்தியை எழுதி அனுப்பி, சிங்கமெனச் சிலிர்த்து நின்ற செந்தமிழே — உனக்கு இந்த வேலைகள் எல்லாம் நொடிப்பொழுதில் முடியக்கூடியவை என்பது எனக்குத் தெரியும்.

"ஆளுங் கட்சியாகிவிட்டார்கள் — இயற்கையாக ஆளுங் கட்சிக்கு வரக்கூடிய 'மதமதப்பு' வந்துவிடும்" என்று எதிர்பார்த்தார்கள் சிலர்! அண்ணனின் கதகதப்பில் வளர்ந்த நம்மை, 'ஆளுங் கட்சி' என்ற மதமதப்பு எட்டிப்பார்க்காது என்பதை நிரூபித்துக் காட்டிக்கொண்டே இருக்கிறாய்!

கோட்டையில் நான் இருப்பதாலேயே, 'உன்னோடு நான் நெருங்கியில்லை' என்று யாராவது கூற முடியுமா — நிழலைபோல நான் உன்னைத் தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறேன்; உன் உழைப்புக்

(4-ம் பக்கம் பார்க்க)

ஓட்டு முறையிலே வளர்ந்தவர் நாம்

வேட்டு முறையால் நம்மை ஒழித்திட முடியாது

அரசியல் ஆதாயம் தேடுவதற்கு அல்ல நமது தொழிற்சங்கம்

அணுகுமுறையில் கழகத்துக்கும் மற்றக் கட்சிகட்கும் வேறுபாடு— பொதுச்செயலாளர் நாவலர் விளக்கம்

சென்னை, ஜுலை 17—

"தொழிற் சங்கங்களின் வரலாற்றைப் புரட்டிப் பார்ப்பீர்களானால், மற்ற தொழிற் சங்கங்களைப்போல வன்முறையிலோ — அறவழியற்ற போராட்ட முறையிலோ ஈடுபடாமல் நமது கழகத் தொழிற்சங்கம் செயல்பட்டு வருவது தெரியும்!

"மற்றவர்கள், அரசியல் ரீதியில் — கட்சி இலாபம் கருதித் தொழிற் சங்கங்களை நடத்திவருகிறார்கள்; ஆனால் நாமோ, அரசியல் ரீதியில் நடத்தாமல் — தொழிற் சங்கத்தைத் தொழிற்சங்க ரீதியிலேயே நடத்திவருகிறோம்.

"தொழில் அமைதி காணவும் — தொழிலாளர் நலம் பேணவும் — தொழில் வளம் பெருகவும் — இதனால் இந்த மாநிலம் மற்ற மாநிலங்கள் எல்லாவற்றையும்விட மேம்பட்டு விளங்கவுமே நாம் தொழிற்சங்கம் கண்டிருக்கிறோம்; மற்றவர்களோ — தொழிற்சங்கத்தை ஆதாரமாக வைத்து அரசியலில் ஆதாயம் தேட முற்பட்டிருக்கிறார்கள்!

'கட்சியினால்தான் தொழிற்சங்கம் — என்பது நம்முடைய கொள்கை; கட்சிக்காகத்தான் தொழிற்சங்கம்' என்பது அவர்களுடைய கொள்கை; இதுதான், நமக்கும் — அவர்களுக்கும் உள்ள அணுகுமுறை வேறுபாடு ஆகும்."

என்று, கழகப் பொதுச்செயலாளர் நாவலர் அவர்கள், தொழிலாளர் முன்னேற்றச் சங்கம் பேரவையின் சார்பில் நடைபெற்ற சிறப்புக் கூட்டத்தில் உரையாற்றுகையில் விளக்கினார்.

நாவலர் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:—

"சிம்சன் தொழிற்சங்கத்தில் கழகத் தலைமை இருந்தபோது ஒரு தடவையாவது கட்சிக் கூட்டம் அங்கே நடந்ததுண்டா — இல்லையே! அமைச்சர்கள் யாராவது அங்கே சென்றிருக்கிறார்களா — கிடையாதே!

அங்கே இன்றைக்கு அவர்கள் சங்கம் — அங்கேயே கட்சிக் கூட்டமும் நடத்துகிறார்கள்.

இத்தனை ஆண்டுக்காலத் தொழிற்சங்க வரலாற்றில், அவர்களால் உண்டாக்கப்பட்ட வன்முறைச் செயல்கள் — 'அண்டர் கிரவுண்டு' வேலைகள் ஆகியவைகளுக்காக எவ்வளவு பணத்தை வீசியிருப்பார்கள் அவர்கள்?

அவர்களுடைய அணுகுமுறை — வேட்டு முறை; அது இந்த நாட்டுக்கு ஒத்துவராது என்பதால் தான், 'ஓட்டு முறை உயர்ந்தது' என்பதைப் பேரறிஞர் அண்ணா அவர்கள் உணர்த்தினார்கள்.

நன்முறைகளால் நம்மை வெற்றி காண முடியாது என்பதை நன்றாகப் புரிந்துகொண்ட பிறகுதான், வன்முறைகளால் நம்மை அவர்கள் வெல்லப் பார்க்கிறார்கள்!

இந்த வன்முறைகளை நாம் இப்போதுதானா சந்திக்கிறோம் — வண்ணை பாண்டியன், மயிலாடி பாரியப்பன், கோவை ஆரோக்கியசாமி, தூத்துக்குடி கே.வி.கே. சாமி ஆகிய கழகக் கண்மணிகளின் வரிசையில் கடைசியாகப் பிரதாபசந்திரன் வீழ்ந்திருக்கிறான்!

இப்படிப்பட்ட வன்முறைகளில் ஈடுபட்டவர்கள் எல்லாம் வெற்றி பெற்றதாக வரலாறு உண்டா? தேடிப் போய்ச் செய்கின்ற போராட்டம் எதுவும் வெற்றி பெறாது; இதைத்தான் பேரறிஞர் அண்ணா அவர்களும், 'நான் போராட்டத்தைத் தேடி அலைய மாட்டேன்; தேடி வருகின்ற போராட்டத்திலிருந்து ஓடி ஒளிய மாட்டேன்' என்று குறிப்பிட்டார்கள்.

தேடி அலைபவர்கள் நடத்துகின்ற போராட்டம்தான் இப்போது நடந்து கொண்டிருக்கிறது!

நியாயமான கோரிக்கைகளல்ல இதற்குக் காரணம்; எப்படியாவது கழக அரசை ஒழித்துவிட வேண்டும் என்ற எண்ணம்தான் அதற்குக் காரணம்!

'தொழிலாளர்களைப் பற்றி இந்த அரசுக்கு என்ன தெரியும்' என்கிறார்கள்; தொழிலாளர் நாளான மே விழா அன்று மத்திய அரசோ வேறெந்த மாநில அரசோ விடுமுறை விடவில்லை; தமிழக அரசுதான் மே நாளன்று சம்பளத்தோடு கூடிய விடுமுறை தொழிலாளர்களுக்குத் தர வேண்டும் என்பதைச் சட்டமாக்கியது.

இதுதான் தொழிலாளர்களைப் பற்றி அறியாத அரசாம் — அவர்கள் சொல்கிறார்கள்!

"சில பேரிடம் பெரும் பணம் பெற்றுக்கொண்டு கழகத்தை

(4-ம் பக்கம் பார்க்க)

கோட்டைக்குள் நுழையக் குறுக்கு வழி இல்லை என்பதை உணர்ந்தபின் 'காலம் கனியுமா' எனக் காத்திருக்கின்றனர் --

அதற்காகப் பல சோதனைகளை நடத்துகின்றனர் -- யார் காலைவிட்டு ஆழம் பார்ப்பது என்று யோசிக்கின்றனர்

அணுகு முறையில் தவறென்ன கண்டார் தலைமையமைச்சர்?

சனநாயக முறையில் அமைந்துள்ள கழக அரசை வன்முறைகள் மூலம் கவிழ்க்க வழிகோலுவதேன்?

செயலில்--சிந்தனையில்--எழுத்தில்--பேச்சில் வன்முறைக்குச் சிறிதளவும் இடந்தராதீர்; அனைத்துக் கட்சித் தலைவர்கட்கும் கலைஞர் வேண்டுகோள்

சென்னை, ஜூலை 17—

"தலைமையமைச்சர் இந்திரா காந்தியார், எந்த நிருபர்கள் கூட்டத்தில், 'கழக அரசின் அணுகுமுறை சரியில்லை' என்று கூறினர்களோ -- அதே கூட்டத்தில்தான், கேரளத்தில் நடைபெறும் தனியார் கல்லூரிப் போராட்டப் பிரச்சினை பற்றியும் பேசினர்; 'அது, கேரள மாநிலம் சம்பந்தப்பட்ட பிரச்சினை -- அதை மாநில அரசு கவனித்துக்கொள்ளும்' என்று அவர் குறிப்பிட்டார்.

"கேரளத்திற்கு ஒரு நீதி -- தமிழகத்திற்கு ஒரு நீதி -- என்ற அந்தப் போக்கு, 'மாநில சுயாட்சிக் கோரிக்கை வலுப்பெறுகிறது' என்பதைத்தான் உணர்த்துகிறது!

"விவசாயிகள் பிரச்சினை போன்ற கிளர்ச்சிகளை நடத்துவதால், கோட்டைக்குக் குறுக்குவழி கிடைத்துவிடும் என்று அவர்களே நம்பவில்லை; அவ்வளவு சுலபமாக அதைச் செய்ய முடியும் என்று அவர்கள் கருதுகிருர்கள் எனவும் நாம் நம்பவில்லை!

"ஆனாலும், கழக அரசைக் கவிழ்க்க அவர்கள் முயற்சி செய்யமாட்டார்கள் என்று கூறிவிடவும் முடியாது; 'எப்போது காலம் கனியும் -- எப்போது நேரம் வரும்' என்று காத்துக் கொண்டிருக்கிருர்கள்; அதற்காகப் பல சோதனைகளை நடத்திக் கொண்டிருக்கிருர்கள்; யார் காலைவிட்டு ஆழம் பார்ப்பது' என்று யோசித்துக்கொண்டிருக்கிருர்கள்!

"ஒரு நிகழ்ச்சி முடிந்துவிட்டது; ஆகவே, எல்லாம் முடிந்துவிட்டது என்றிருக்கவும் தேவையில்லை; பல நிகழ்ச்சிகள் படையெடுக்கலாம்; அவற்றைச் சந்திக்கத் தமிழ் மாந்தர் விழிப்புடன் இருக்க வேண்டும்.

"வன்முறை என்பது அடிதடி மட்டுமல்ல -- கத்திக்குத்து மட்டுமல்ல; வன்முறை என்பது -- சாலைகளில் இடையூறுகளை ஏற்படுத்திப் போக்குவரத்துக்களைத் தடுத்துக் கலகம் செய்வது மட்டுமல்ல; சனநாயக முறையில் அமைந்த ஓர் அரசை இடையில் கவிழ்ப்பதும் வன்முறைதான்; அந்த வன்முறைப் போக்கைக் கண்டிக்கத் தயாராக வேண்டும்.

"ஆயுதங்களை -- போர்க் கருவிகளைத் தூக்கிக்கொண்டு யார் அமளி செய்தாலும், அவர்கள் காங்கிரசுக்காரர்களாக இருந்தாலும் -- கம்யூனிஸ்டுகளாக இருந்தாலும் -- கழகத்தவர்களாக இருந்தாலும் -- வேறு எந்தக் கட்சியைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் -- கழக அரசு அவர்கள்மீது கடுமையாக நடவடிக்கை எடுக்கும்.

"'வன்முறை வேண்டாம்' என்று எதிர்க் கட்சிகளுக்கு மட்டுமல்ல -- கழகத்திற்கும், தோழமைக் கட்சிகளுக்கும் வேண்டுகோள் விடுக்கிறேன்; வன்முறை என்பது, செயலில் -- பேச்சில் -- எழுத்தில் -- சிந்தனையில் இருக்கக்கூடாது என்று உறுதி கொள்வோம்"

—என்று கழகத் தலைவர் கலைஞர் அவர்கள், நேற்று முன்னாள் சென்னைக் கடற்கரையில் நடைபெற்ற வன்முறைக் கண்டனப் போதுக் கூட்டத்தில் உரையாற்றுகையில் சுட்டிக்காட்டி வலியுறுத்தினர்; பல்வேறு பிரச்சினைகளையும் நிலைமைகளையும் விளக்கி அவர் ஆற்றிய உரை வருமாறு:—

சோஷலிசத்தைப் பரப்ப முயற்சிக்கிறோம்--அனைவருடைய நல்லெண்ணத்தையும் நாங்கள் எப்படிப் பெறமுடியும்?

"திருமதி இந்திரா காந்தி அண்மையில் நிருபர்களுக்கு அளித்த பேட்டியின்போது, ஓர் அறிவுரையை எனக்கும் -- கழக அரசுக்கும் சொல்லியிருக்கிருர்; 'அண்ணாவின் தம்பி -- அவர் வழிநின்று ஆட்சி செலுத்துகிறவன்' என்ற வகையில், அறிவுரைகள் எந்த இடத்திலிருந்து வந்தாலும் எப்போதும் வரவேற்பவன் நான்.

'எல்லா மக்களும் திருப்தியடைகின்ற வகையில் ஆட்சி நடைபெற வேண்டும் -- எல்லா மக்களின் திருப்தியையும் சம்பாதித்துக் கொள்கின்ற அளவுக்கு நிலைமைகளைக் கையாள வேண்டும்' என்ற அறிவுரையைத் தலைமையமைச்சர் வழங்கியிருக்கிருர்.

அறிவுரை சிறந்ததுதான்; ஆனல், சோஷலிசச் சமுதாயத்தை உருவாக்க வேண்டுமென்று ஒரு அரசு முன்வருமேயானல், எல்லாப் பகுதியிலும் இருக்கின்ற மக்களுடைய திருப்தியைச் சம்பாதித்துக் கொள்வதென்பது இயலாத காரியம் என்பதை மட்டும் தலைமையமைச்சருக்குச் சொல்லிக் கொள்கிறேன்.

உதட்டளவில் கவர்ச்சிகரமாக முழக்கமிடுபவர்கள் மட்டுமேதான் எல்லோரையும் அனுசரித்துச் செல்லமுடியும்; உண்மையானச் சோஷலிசம் செயல்பட வேண்டுமானல், சிலருடைய விரோதங்கள் ஏற்பட்டுத்தான் தீரும்!

அரச மானியங்கள் ரத்து செய்யப்பட்ட நேரத்தில், அனைவரையும் அனுசரித்துப் போக தலைமையமைச்சர் இந்திராவால் முடியவில்லை! 14 பெரிய வங்கிகள் தேசியமயமாக்கப்பட்டபோது, அனைவரையும் அனுசரித்துச் செல்ல அவரால் முடியவில்லை!

'பஸ்களைத் தேசியமயமாக்கப் போகிறோம்' என்று கூறியபின், பஸ் முதலாளிகளின் பாராட்டைப் பெறமுடியுமா?

'10 பஸ்களுக்குமேல் வைத்துக்கொள்ளக் கூடாது' என்று உச்சவரம்பு கொண்டுவந்து நிறைவேற்றிவிட்டுப் பஸ் முதலாளிகளின் பாராட்டைப் பெற இயலுமா?

'30 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்ற உச்சவரம்பை 15 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று குறைத்துவிட்டு -- விதிவிலக்குகளையெல்லாம் ரத்து செய்தவிட்டு, 'அனைதையும் அரசு எடுத்துக் கொள்ளும்' என்ற அறிவிப்பைத் தந்துவிட்டு -- நிலப் பிரபுக்களின் பாராட்டைப் பெற முடியுமா?

ஆகவேதான், ஒரு பெரிய துணைக்கண்டத்தை ஆண்டுகொண்டிருக்கின்ற திருமதி இந்திரா காந்தி அவர்களுக்கு வினயத்தோடும், பணிவன்போடும் சொல்லிக் கொள்கிறேன் ---

> **"நாங்கள் உண்மையாகவே சோஷலிசத்தை இங்கே பரப்ப விரும்புகிறோம்; ஆகவே, நாங்கள் எல்லோருடைய நல்லெண்ணத்தையும் பெறுவது கொஞ்சம் சிரமமாக இருக்கும்" என்று!**

முன்கூட்டியே கூறியிருந்தால் இந்த நிலை ஏற்பட்டிருக்குமா?

இந்திரா காந்தி அவர்கள் -- நிருபர்கள் கூட்டத்தில், 'எங்களுக்கு மின் கட்டணம் பிரச்சினையல்ல; அது உயர்ந்தால் என்ன -- தாழ்ந்தால் என்ன; அதைப் பற்றிக் கவலையில்லை; எங்களுடைய கவலையெல்லாம், தமிழ்நாட்டு அரசாங்கத்தின் அணுகுமுறை பற்றியதுதான்' என்று சொன்னர்.

இந்தச் செய்தியை இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் 2-ந் தேதியே வெளியிட்டிருந்தால், இந்தப் போராட்டம் -- கிளர்ச்சி -- அர்த்தால் -- வேலைநிறுத்தம் தொடர்பாக ஏற்பட்ட நிகழ்ச்சிகள் நாட்டில் நடைபெருமல் இருந்திருக்கக்கூடும் அல்லவா?

'இந்த அரசைக் கவிழ்த்துவிடலாம்' என்ற தைரியம் கிளர்ச்சி நடத்தியவர்களுக்கு ஏற்பட்டது; அப்படியெல்லாம் அவர்கள் பேசியதும் உண்டு.

1971-லும் அப்படித்தான்; 'அரசைக் கவிழ்த்து விடலாம் -- தேர்தலில் நமக்குத்தான் வெற்றி; அமைச்சர்களெல்லாம் தோல்வியடையப் போகிருர்கள்' என்றெல்லாம் பேசிப் பேசி -- பக்கத்திலிருப்பவர்களுக்கு நம்பிக்கையூட்டி -- அன்று தேர்தலில் நம்மை அல்லோலகல்லோலப்படுத்தியது போலத்தான், இந்தக் கிளர்ச்சியையும் வைத்துக்கொண்டு, 'தமிழகத்தில் சட்டம் -- ஒழுங்கு -- அமைதி குலைந்துவிட்டது' என்று காரணம் காட்டி, ஒரிசா -- கேரளம் ஆகிய மாநிலங்களைப்போல் இந்த மாநிலத்திலும் ஆட்சியைக் கவிழ்த்துவிட்டு இந்திரா காங்கிரசு ஆட்சியைக் கொண்டுவந்துவிடலாம் என்று கனவு கண்டார்கள்!

அப்படியெல்லாம் கனவு கண்டு கொண்டிருந்தவர்களுக்கு மத்தியிலிருந்து எந்தவிதமான தாக்கீதும் கிடைக்காத காரணத்தால், 'அவர்களும் இதை ஆதரிக்கிருர்கள்' என்ற நம்பிக்கை இவர்களுக்கு ஏற்பட்டது!

ஆகவே, 5-ந் தேதியன்று எங்கு பார்த்தாலும் வன்முறைகள் தலையெடுத்தன -- எங்கு பார்த்தாலும் அராஜகம் தலைவிரித்தாடியது! இந்திரா காந்தி அம்மையார் 2-ந் தேதியே அறிவித்திருந்தால் இவ்வளவு அமளிகள் நாட்டில் ஏற்படாமல் போயிருக்கக்கூடும்.

நான் அந்த அம்மையாருடைய செல்வாக்கை மதித்து -- பெருமையை மதித்து -- இடத்தின் உயர்வைக் குறைக்காமல் சொல்கிறேன் -- 'அவர்கள் முன்கூட்டியே அறிவித்திருந்தால் இந்த நிலைமை நிச்சயம் ஏற்பட்டிருக்காது' என்று! ஆனல் அப்போது தவறிவிட்டார்கள்; 5-ந் தேதிக்குப் பிறகு நிருபர்கள் கூட்டத்தில் இந்தச் செய்தியைச் சொன்னர்கள்.

தலைமையமைச்சர் கருத்துக்கு மாருக தமிழ்நாட்டுக் காங்கிரசார் சென்றதேன்?

தமிழ்நாட்டு இந்திரா காங்கிரசார் மின் கட்டண உயர்வைப் பற்றி என்ன சொன்னர்கள்? 14—6—72 அன்று சென்னையில் கூடிய இந்திரா காங்கிரசுக் கட்சியின் செயற்குழுவின் தீர்மானம் பற்றி வெளியிடப்பட்டிருக்கின்ற ஏடு ஒன்றில், 'மின் சக்தி விஷயமாகப் பிற மாநிலங்களில் இருக்கின்ற சலுகைகளைக் கவனியாமல் -- அதை ஒப்பிட்டுப் பேசி ஏய்க்கும் நோக்குடன் இருக்கும் அரசின் போக்கைக் கண்டித்தார்கள்' என்று வெளிவந்திருக்கிறது.

'மின் கட்டண உயர்வைப் பற்றி அல்ல பிரச்சினை' என்கிருர் தலைமையமைச்சர்; ஆனல், 'மின் கட்டண உயர்வு பற்றி ஒப்பிடுவதே தவறு' என்று தீர்மானம் போடுகிறது தமிழ்நாட்டு இந்திரா காங்கிரசுக் கட்சி!

'ஆந்திரத்தில் மின் கட்டணம் 12 காசு -- மைசூரில் 12 காசு -- நந்தினி சத்பதி ஆளும் ஒரிசாவில் 26 காசு -- அதுபோன்றே தலைமையமைச்சரின் உத்தரப் பிரதேசத்திலும் அதிகமான மின் கட்டணம் -- ஆனல் தமிழகத்தில் குறைவு' என்று நாம் ஒப்பிட்டுப் பேசுவதை, 'தவறு' என்று இங்கே தீர்மானம் போடுகிருர்கள்.

தலைமையிலுள்ளவர்கள் ஒரு கருத்தைச் சொல்கிருர்கள்; இங்கே இருப்பவர்கள் ஒரு கருத்தைச் சொல்கிருர்கள்; அகில இந்தியக் கட்சிகளில் சிலவற்றுக்கு இதுபோன்ற ஒரு போக்கு இருக்கிறது; எல்லா அகில இந்தியக் கட்சிகளையும் கூறவில்லை -- சில கட்சிகள் அப்படி இருக்கின்றன!

இந்த இலட்சணத்திலா இப்படிக் கூறுவது?

விவசாயிகள் போராட்டத்தைப் பற்றிக் கருத்தறிவித்தபோது, 'தமிழ்நாட்டில் தி. மு. கழக அரசைக் கவிழ்க்கும் நோக்கத்துடன் இக்கிளர்ச்சி நடைபெறுகிறது' என்று பாரதிய ஜன சங்கத்தின் அகில இந்திய தலைவர் வாஜ்பாயி கூறியிருக்கிருர்; ஆனல், தமிழ்நாட்டிலுள்ள ஜன சங்கத்தைச் சார்ந்தவர்கள், தி. மு. கழக அரசை எதிர்த்துக் கொடி பிடிக்கிருர்கள்!

அதேபோன்று, டில்லியிலுள்ள இந்திரா காங்கிரசு ஒரு கருத்தை சொல்கிறது -- இங்கே இருக்கின்ற இந்திரா காங்கிரசு அந்தக் கருத்தை எதிர்த்து மறியல் செய்கிறது!

'மின் கட்டணம் ஒரு பிரச்சினை அல்ல' என்று அங்கே இருப்பவர்கள் கூறுகிருர்கள்; இங்கே கடலூர் இந்திரா காங்கிரசு எம்.பி., மின் கட்டண உயர்வை எதிர்த்து மறியல் செய்கிருர்! திண்டிவனம் இந்திரா காங்கிரசு எம்.பி. மறியல் செய்கிருர்!

ஆனல் நம்மைப் பார்த்துக் கூறுகிருர்கள் -- 'அணுகு முறை சரியில்லை' என்று!

காட்டமுடியுமா கணக்கு?

'சோஷலிசச் சித்தாந்தம்' என்பதே, 'தாங்கக்கூடியவர்களுக்கு வரி விதிப்பது -- தாங்க முடியாதவர்களுக்கு வரிகளிலிருந்து விலக்கு அளிப்பது' என்பதுதான்; இந்த அடிப்படையில், 1967-ஆம் ஆண்டில் அறிஞர் அண்ணா அவர்கள் அமைத்த ஆட்சி நடைபெற்றுவருகிறது.

மின் கட்டண உயர்வு அறிவிக்கப்பட்டதும், என்னைப் பார்த்துப் பேச வேண்டும் என்று விவசாயிகள் சங்கம் அறிவித்தது; 'தாராளமாக வந்து பேசலாம்' என்றேன்—வந்து பேசினர்கள்; தங்களுக்கு உரிய சிரமங்களைப்பற்றி அவர்கள் எடுத்துக் கூறியபிறகு, நான், 'இதற்கு ஒரு தீர்வு காணலாம்' என்று கூறினேன்; அதன்படி, சலுகைகள்பற்றிய அறிவிப்பையும் வெளியிட்டேன்.

அதற்குப் பிறகும், 'போராட்டம்' என்று அறிவித்தார்கள்; அந்தப் போராட்டம் நடைபெற்று -- துப்பாக்கிப் பிரயோகம் நடந்து -- பல உயிர்கள் பலிபிடப்பட்டதை அறிந்ததும், மனம் பதறி ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்தேன்!

இன்றைக்குக்கூட அந்தப் போராட்டத்தில் உயிர் இழந்தவர்களின் குடும்பங்களுக்கு—ஒவ்வொரு குடும்பத்துக்கும் ஐயாயிரம் ரூபாய் உதவி நிதி அளிக்கப்படும் என்று அறிவித்திருக்கிறேன்.

இப்போது, 'அணுகுமுறை தவறு' என்று கூறுகிருர்களே -- அவர்களுக்கு நினைவுபடுத்துகிறேன்; 1958—59-ல், முதுகுளத்தூரில் பிணங்கள் விழுந்தபோது, காமராசரும் -- பக்தவத்சலமும் அமைச்சர்களாக இருந்தார்கள்; இன்றையத்தினம் மத்திய அமைச்சராக இருக்கும் சி. சுப்பிரமணியம், அன்றையத்தினம் தமிழ்நாட்டின் நிதி அமைச்சராக இருந்தார்; அப்போது அந்த முதுகுளத்தூரில் உயிரிழந்தவர்களின் குடும்பத்துக்கு உதவித் தொகை தந்தார்களா? எத்தனைபேருக்கு உதவித் தொகை தந்தார்கள் -- காட்டமுடியுமா கணக்கு?

1965-ஆம் ஆண்டில் நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் போது, சட்டமன்றத்திலே பக்தவத்சலம் -- 50-பேர் சுட்டுக் கொல்லப்பட்டதாகக் கணக்குத் தந்தாரே -- அப்போது அந்தக் குடும்பங்களுக்கு உதவித் தொகை தரப்பட்டதா? எத்தனைபேருக்கு உதவித் தொகை தந்தீர்கள் -- காட்ட முடியுமா கணக்கு?

1953-ஆம் ஆண்டில், நான் கல்லக்குடிப் போராட்டத்தில் கலந்து கொண்ட நேரத்தில் துப்பாக்கிச் சூடு நடந்ததே -- அப்போது இறந்தவர்களுக்கும், காயம்பட்டவர்களுக்கும் உதவித் தொகை தரப்பட்டதா? நாங்கள் ஆட்சிக்கு வந்தபிறகுதான் பாதிக்கப்பட்டோருக்கு ரூ. 500 என்று உதவித் தொகை தந்தோமே தவிர, அவர்கள் உதவி நிதி தந்ததாகக் கணக்குக் காட்டமுடியுமா?

'எடுத்ததற்கெல்லாம் நீதி விசாரணையா' என்று கேட்டவர்கள்தானே இவர்கள்?

அவர்களது ஆட்சியில் முதுகுளத்தூர் படுகொலை நடந்ததே -- அதற்கு நீதி விசாரணை உண்டா? 'நீதி விசாரணை வேண்டும்' என்று அப்போதைய சட்டமன்றத்தில் பேரறிஞர் அண்ணா அவர்களும் -- மூக்கையா தேவர் அவர்களும் -- இதே கம்யூனிஸ்டு கல்யாணசுந்தரமும் கோரினர்கள்; காமராசர், 'முடியாது' என்ருர்.

அப்போதைய நிதியமைச்சர் சி. சுப்பிரமணியம், சட்டமன்றத்தில் -- முதலமைச்சர் காமராசருக்குப் பதிலாகச் சொன்னர் -- 'எடுத்ததற்கெல்லாம் நீதி விசாரணை என்று வைத்தால், பிறகு போலீசுக்காரர்கள், கலவரம் நடக்கின்ற இடத்துக்குச் செல்லமாட்டார்கள்' என்று!

முதுகுளத்தூரில் வைக்கோற்போரில் பிணங்களை வைத்து, எரிக்கப்பட்ட கொடுமை நிறைந்த நிகழ்ச்சி, 'எடுத்ததற்கெல்லாம்' எனும் பட்டியலில் அன்றையத்தினம் சேர்க்கப்பட்டது.

வாய்க்கால்களில் பிணங்கள் மிதந்த அந்தக் கோர நிகழ்ச்சி, 'எடுத்ததெற்கெல்லாம்' எனும் பட்டியலில் அன்றையத்தினம் சேர்க்கப்பட்டது.

கீழத்தூவலில் நாலைந்துபேரைக் கண்ணைக் கட்டி -- கையைக் கட்டி வைத்துச் சுட்ட பயங்கர நிகழ்ச்சி, 'எடுத்ததெற்கெல்லாம்' எனும் பட்டியலில் அன்றையத்தினம் சேர்க்கப்பட்டது!

குருதிதோய்ந்த நாக்குடன் வேதாந்தம் பேசுகிறது வேங்கை

அப்படிப்பட்டவர்கள்தான் இன்றையத்தினம், 'அணுகுமுறை சரியில்லை' என்று நம்மைப் பார்த்துக் கூறுகிருர்கள் -- என்ன அணுகுமுறை கெட்டுவிட்டது?

பல்லடத்திற்கு அருகிலுள்ள ஐயம்பாளையத்தில் இறந்தவர்களை, ஏறத்தாழ 30 மைல்களுக்கு அப்பால் உள்ள கோவை நகருக்குக் கொண்டுபோய் ஊர்வலம் வைக்கவேண்டும் என்று கோரினர்கள் -- அதற்கு அனுமதித்தோம்.

அன்றையத்தினம் கோவை கலெக்டரைத் தொலைபேசி மூலம் அழைத்து, 'ஊர்வலம் அமைதியாக நடந்ததா -- சவ அடக்கம் அமைதியாக நடைபெற்றதா' என்று கேட்டேன்; 'இல்லை; மறுபடியும் அவர்கள் அதே ஐயம்பாளையத்துக்குக் கொண்டு செல்லவிருக்கிருர்கள்' என்று அவர் கூறினர்; 'அதற்கும் அனுமதி தந்துவிடுங்கள் -- அமைதியாக எல்லாம் நடைபெறட்டும்' என்று கூறினேன்.

ஆனல், காமராசர் முதலமைச்சராக இருந்தபோது ஒரு நிகழ்ச்சி நடைபெற்றது; இந்த மாநிலத்திற்குத் 'தமிழ்நாடு' என்று பெயரிடப்படவேண்டும் என்று கோரி உண்ணா நோன்பிருந்தார் -- சங்கரலிங்க நாடார்; விடுதலைப் போராட்டத்தில் கொடி தூக்கி உழைத்த உத்தமர் அவர்; அத்தகையவர், ஏறத்தாழ 60 நாள் உண்ணா நோன்பிருந்து இறந்தார்.

அவரது உடல் மதுரை மருத்துவமனைக்குப் பிரேத விசாரணைக்குக் கொண்டு செல்லப்பட்டது; ஓடோடிச் சென்று சிலர் காமராசரிடம், 'தமிழ்நாடு என்று பெயரிடப்படவேண்டும் என்பதற்காக அவர் உண்ணா நோன்பு இருந்தது தெரிந்ததுதானே -- உண்ணா நோன்பு இருந்து இறந்தார் என்று தெரிந்த பின்னரும், பிரேதப் பரிசோதனை தேவையா -- உடலைக் கூறுபோட வேண்டாம்' என்று கெஞ்சிக் கேட்டுக்கொண்டனர் -- கேட்கவில்லை காமராசர்.

பிரேதத்தைக் கூறுபோட்டு, 'உண்ணா நோன்பு இருந்துதான் செத்திருக்கிருர்' என்று டாக்டர்கள் உரைத்த பிறகு, 'மதுரை வீதியிலே பிரேத ஊர்வலம் நடத்தவேண்டும்' என்று காமராசர் ஆட்சியைக் கேட்டார்கள் -- அதுவும் மறுக்கப்பட்டது.

'மயானத்தில் இரங்கல் கூட்டமாவது நடத்தவேண்டும்' என்று கேட்டுக்கொண்டார்கள் -- அதுவும் மறுக்கப்பட்டது காமராசர் ஆட்சியிலே!

அத்தகைய காமராசர், இதே சீரணி அரங்கில் நம்மைப்பற்றிப் பேசுகிருர்! குருதி தோய்ந்த நாக்குடன் வேங்கை பேசியது -- வேதாந்தம்.

பல்லடத்திலிருந்து கோவை சென்று பிரேத ஊர்வலம் நடத்த அனுமதித்த ஆட்சி இது; எனவே, அணுகு முறையிலே என்ன தவறு கண்டார்கள் இவர்கள்!

இது பாரபட்சத்திற்கு ஒரு சான்று!

இந்தியா முழுவதும் -- தமிழகத்தைத் தவிர -- இந்திரா காங்கிரசின் ஆட்சி நடப்பதாகப் பெருமையோடு வெளிநாட்டார் பேசுகிருர்கள்.

'கேரளம் இல்லையா' என்று சிலர் கேட்கக்கூடும்; கேரளத்தில் இந்திரா காங்கிரசின் தயவுடனும் -- முஸ்லீம் லீக்கின் கருணையுடனும் கம்யூனிஸ்டுக் கட்சி அங்கே ஆட்சி நடத்துகிறது; ஆகவே, 'அவர்கள் ஆண்டால் என்ன -- நாம் ஆண்டால் என்ன' என்று இந்திரா காங்கிரசார் அந்த ஆட்சியை விட்டு வைத்திருக்கிருர்கள்; ஆகவே, அவர்களை உறுத்திக் கொண்டிருப்பதெல்லாம் தமிழ்நாடு ஒன்றுதான்!

1965-ஆம் ஆண்டிலே இங்கே இந்தி எதிர்ப்புப் போர் நடைபெற்றபோதும் -- துப்பாக்கிப் பிரயோகங்கள் நடைபெற்று மாணவச் செல்வங்கள் சுடப்பட்டபோதும் -- மத்திய உள்துறை அமைச்சர் குல்ஜாரிலால் நந்தா, 'தமிழ்நாட்டில் அமளிகள் நடைபெற்றபோது எதற்கும் கலங்காத 'பாறை'போல் இருந்து பக்தவத்சலம் சமாளித்தார்' என்று பாராட்டினர்; அப்படிப்பட்ட கட்சியைச் சார்ந்தவர்கள்தான், 'கருணாநிதியின் அணுகுமுறை தவறு' என்று சொல்கிருர்கள்!

30 மைல் தூரம் சவத்தை எடுத்துச் சென்று ஊர்வலம் நடத்தவும் -- மீண்டும் கொண்டுவரவும் அனுமதி அளித்த அரசைப்பார்த்து, 'அணுகுமுறை சரியில்லை' என்று கூறுகிருர்கள்!

தமிழ்நாட்டில் இந்தி எதிர்ப்புப் போராட்டம் நடைபெற்றபோது மத்திய அமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் இங்கே வானொலியில் பேசுகையில், பக்தவத்சலத்தை, 'மலைப்பாறைப்போல்' இருந்தார்' என்று பாராட்டினர்; காரணம், டில்லியில் நடந்ததும் அதே கட்சி ஆட்சி -- இங்கே நடந்ததும் அதே கட்சி ஆட்சி!

ஆனல் இப்போது, அங்கே ஒரு கட்சி -- இங்கே ஒரு கட்சி; இந்தப் பாரபட்ச உணர்வு இருக்கின்ற காரணத்தால்தான், 'இது, மாநில அரசின் விவகாரம்' என்று கூறுவதற்கு அவர்களுக்கு மனமில்லாமல் போய்விட்டது!"

பத்திரிகைகளை தூண்டுகிருர் காமராசர்-கழக அரசுக்கு எதிராக எழுதுவது போதாதாம்—

'தேசியப் பத்திரிகை'களை 'மஞ்சள் பத்திரிகை'களாக மாறச் சொல்லுகிருர்

எழுத்துரிமை--பேச்சுரிமை பற்றிக் காமராசரா பேசுவது?

அவரது ஆட்சியில் நடைபெற்ற 'கொடுமை'களை மக்கள் மறந்துவிட்டிருப்பர் என எண்ணுகிருரா?

அன்று நடைபெற்றவைகளை இன்று மறைக்க முயற்சிப்பதன் மர்மம்?

> **"பிரிட்டிஷ் ஆட்சி இருந்த காலத்தில் தேசியப் பத்திரிகைகள் துணிவோடு ஆட்சியை எதிர்த்து எழுதின; தவறுகளைப் பத்திரிகைக்காரர்கள் அப்படி இப்போது கண்டிக்க முடிகிறதா?"**
>
> —காமராசர் பேச்சு ('நவசக்தி')

ஏன் முடியாது? இப்பொழுதே அந்தத் திருப்பணியைத்தானே 'தேசியப் பத்திரிகை'கள் என்பவை செய்துவருகின்றன!

அந்தப் பத்திரிகைகளின் இன்றைய இலட்சியமே தி. மு. கழக ஆட்சியை ஒழிக்கவேண்டும் என்பதுதானே? – இது போதாது என்கிருரா காமராசர்?

"பத்திரிகைக்காரர்கட்குப் பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் இருந்த துணிவு, இப்போது இல்லை" என்கிருர்; அப்படியானல், பிரிட்டிஷ் ஆட்சிக்கும்--கழக ஆட்சிக்கும் இடைப்பட்ட ஆட்சிக்காலத்தில் பத்திரிகைகளின் நிலை என்ன? அப்படி ஒரு ஆட்சி இருந்ததாகவே காமராசர் மறந்துவிட்டாரா அல்லது மக்கள் மறந்துவிட்டதாக எண்ணி மறைக்கப் பார்க்கிருரா?

பிரிட்டிஷ் ஆட்சிக்கும் பின் ஏற்பட்ட காங்கிரசு ஆட்சியில், பத்திரிகைச் சுதந்திரம் – எழுத்துரிமை – பேச்சுரிமை எல்லாம் பொங்கி வழிந்தது போலவும், கழக ஆட்சியில் அந்த உரிமைகளே இல்லாததுபோலவும் காமராசர் பேசுவதன் மர்மம் என்ன?

காங்கிரசு ஆட்சிக் காலத்தில் பத்திரிகைகளின் நிலை என்ன? 'தேசியப் பத்திரிகைகள்' எனப்படும் பத்திரிகைகள் எல்லாம் காங்கிரசு ஆட்சிக்கு ஆதரவாகத்தானே இருந்தன? ஆட்சியாளர்கள் எதைச் செய்தாலும் அதைப் பாராட்டுவதுதானே அவைகளின் வேலையாக இருந்தன? தப்பித்தவறி ஆட்சிக்கு எதிராக ஏதேனும் எழுதிவிட்டால், அந்தப் பத்திரிகைகள் தப்பியிருக்க முடியுமா?

இப்போது கழக ஆட்சியைப் பற்றியும் – கழகத் தலைவர்களைப் பற்றியும் தாறுமாருக எழுதுவதுபோல், அப்போதிருந்த ஆட்சியையும் – அமைச்சர்களையும் எந்தப் பத்திரிகையாவது எழுதியதுண்டா? அப்படி எழுதியிருந்தால் அந்த ஏடுகள் பிழைத்திருக்க முடியுமா?

'பழம்பெரும் தேசியப் பத்திரிகை' என்று புகழ்பெற்ற 'சுதேசமித்திர'னைக்கூடக் காங்கிரசு ஆட்சியாளர்கள் விடவில்லையே! இந்தி எதிர்ப்புப் போராட்ட நேரத்தில், அந்த ஏட்டில் வெளியான செய்திகள் ஆட்சிக்கு எதிராக இருந்தன என்பதால், அந்தப் பத்திரிகைமீதுகூட அடக்குமுறையைப் பயன்படுத்தி வழக்குத் தொடுத்தாரே பக்தவத்சலம்!

'சுதேசமித்திர'னுக்கே அந்தக் கதி என்றுல், 'முரசொலி' -- 'மாலைமணி' போன்ற கழக ஏடுகளைப்பற்றிக் கேட்கவா வேண்டும்?

இருபதாண்டுக் காங்கிரசு ஆட்சியில், பெரியாரின் 'விடுதலை'மீது எத்தனை முறை ஜாமீன் வழக்கு? பேரறிஞர் அண்ணாவின் 'திராவிடநாடு' இதழுக்கு ஜாமீன் கேட்கப்படவில்லையா? கலைஞர் எழுதிய நாடகங்களுக்குத் தடை விதிக்கப்படவில்லையா?

'பொன் மொழிகள்' என்ற நூலுக்காக தந்தை பெரியாரையும், 'ஆரிய மாயை' என்ற நூல் எழுதியதற்காக அண்ணாவையும், 'காந்தியார் சாந்தியடைய' என்ற நூலுக்காக ஏ.வி.பி. ஆசைத்தம்பியையும் சிறையிலடைத்தது எந்த ஆட்சி? 'அழியட்டுமே திராவிடம்'என்ற நூலை எழுதியதற்காகத் துறையூர் நாராயணன் என்ற தோழரை -- அவர் செத்தபின்னரும் விடவில்லையே! செத்து ஆறு மாதம் கழித்து அவருக்குச் சம்மன் வந்ததே!

இவற்றையெல்லாம் தமிழ் மக்கள் மறந்துவிட்டிருப்பார்கள் என்ற எண்ணமா காமராசருக்கு? எழுத்துரிமை -- பேச்சுரிமைபற்றிக் காமராசரா பேசுவது?

வேறு எந்த ஆட்சியிலும் இல்லாத உரிமைகளை அல்லவா இன்று தமிழ்நாட்டுப் பத்திரிகைகள் -- அதுவும், காமராசரால் 'தேசியப் பத்திரிகைகள்' எனக் குறிப்பிடப்படும் பத்திரிகைகள் அனுபவித்துவருகின்றன? அவற்றின்மீது வழக்குத் தொடரவேண்டும் என்றுல், ஒன்று; இரண்டா -- ஓராயிரம் வழக்குகள் நாள்தோறும் தொடுத்துக்கொண்டிருக்கலாமே!

காமராசர் சொல்வது சொல்வதுபோல் எந்தத் தேசியப் பத்திரிகை கழக ஆட்சிக்கு ஆதரவாகச் செய்தி போடுகிறது? இதை நேரடியாகச் சொல்லாவிட்டாலும் மறைமுகமாகவாவது காமராசர் சொல்லியிருக்கக்கூடாதா?

'தேசியப் பத்திரிகைகள்' எனப்படுபவை, காங்கிரசுக் ஆட்சிக் காலத்திலும் சரி -- இன்றும் சரி -- கழகத்துக்கு விரோதமான செய்திகளைத்தானே கொட்டை எழுத்தில் வெளியிட்டு மகிழ்

(4-ம் பக்கம் பார்க்க)

தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவை வளர்ச்சி நிதி

சிறப்புக் கூட்டத்தில் நாவலர்-- சத்தியவாணிமுத்து பங்கேற்பு

சென்னை, ஜூலை 17—

தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவையின் வளர்ச்சி நிதிக்காக ஏற்பாடு செய்யப்பட்ட சிறப்புக் கூட்டம், நேற்று காலை எழும்பூர் பெரியார் திடலில் நடைபெற்றது.

பேரவைப் பொதுச்செயலாளர் காட்டூர் கோபால் எம்.எல்.சி. தலைமை வகித்தார்.

சதாசிவம் -- சாந்தா கலைக் குழுவினரின் கலை நிகழ்ச்சியுடன் கூட்டம் தொடங்கியது.

காட்டூர் கோபால் தலைமையுரையாற்றியபின், துணை மேயர் என். வி. என் சோமு, ஜி. பராங்குசம் எம்.எல்.சி., வி. எஸ். கோவிந்தராசன் ஆகியோர் பேசினர்.

சிறப்புச் சொற்பொழிவாளராகக் கல்வியமைச்சர் நாவலர், அமைச்சர் திருமதி சத்தியவாணி வாணிமுத்து ஆகியோர் கலந்து கொண்டு சொற்பொழிவாற்றினர்.

மனிதாபிமான உணர்வுடன் வழங்கப்படும் ஆறுதல் நிதி

'உயிரிழந்தவர்களின் குடும்பங்கட்கு ஓரளவு பயன்படும் என நம்புகிறேன்'

வேதனை உள்ளத்துடன் முதலமைச்சர் அறிவிப்பு

சென்னை, ஜூலை 17--

தமிழ்நாட்டில் அண்மையில் நடைபெற்ற விவசாயக் கிளர்ச்சியின் தொடர்பாக நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டிலும் -- தடியடிப் பிரயோகம் காரணமாக ஏற்பட்ட நெருக்கடியில் சிக்குண்டு இறந்த 17 பேரின் குடும்பத்திற்கும் தலா ரூ. 5,000 வீதம் முதலமைச்சர் நிதியிலிருந்து வழங்கப்படுகிறது.

செய்தியாளரிடம் இத்தகவலைத் தெரிவித்த முதலமைச்சர் கலைஞர் அவர்கள், இதன் தொடர்பாகக் கூறியதாவது:—

"ஏற்கவவே பெருமாநல்லூர் துப்பாக்கிப் பிரயோகத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்கட்கு அரசு முன்வந்து -- முதலமைச்சர் நிதியிலிருந்து ஆறுதல் நிதி வழங்கியபோது, 'அதை ஏற்றுக் கொள்ளக்கூடாது' என்று விவசாயிகள் சங்கத்தின் சார்பில் தடுக்கப்பட்டுவிட்டது; அதனால் அந்தக் குடும்பங்கட்கு அப்போது தர முடியாத நிலை ஏற்பட்டுவிட்டது.

இப்போது அரசு 17 குடும்பங்கட்கு மனிதாபிமான உணர்வுடன் வழங்குகின்ற இந்த ஆறுதல் நிதி, உயிரிழந்தவர்கள் குடும்பங்கட்கு ஓரளவு பயன்படும் என்ற நம்பிக்கையோடும் மீண்டும் ஒரு முறை அந்தக் குடும்பங்களில் உள்ளவர்கட்கு என்னுடைய ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொண்டு இந்தத் தொகையை வழங்குகிறேன்."

உறுதியளித்தபடி உதவி செய்யாததேன்?

புதுடில்லி, ஜூலை 15—

"தமிழ்நாடு அரசு மேற்கொண்டுள்ள 'குடிசைப் பகுதி சீரமைப்புத் திட்ட'த்திற்கு இதர மாநிலங்களின் வீட்டு வசதித்துறை அமைச்சர்கள் பாராட்டு தெரிவித்தனர்"

என்று அமைச்சர் க. இராசாராம், புதுடில்லியில் நிருபர்களிடம் தெரிவித்தார்; அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

"இந்தத் திட்டம் சென்னை நகரில் மட்டுமன்றி, கோவை -- திருச்சி -- சேலம் ஆகிய இதர முக்கிய நகரங்களிலும் மேற்கொள்ளப்படும்; இந்தத் திட்டத்திற்கு மத்திய அரசு உறுதியளித்தபடி உதவி செய்ய முன்வரவில்லை.

ஓட்டு முறையிலேயே...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வளர்க்கக்கூடாது; ஒவ்வொருவரிடமும் வசூல் செய்வோம்; அப்போதுதான் கழக வளர்ச்சியில் எல்லோருக்கும் அக்கறை இருக்கும்" என்ன் அண்ணா அவர்கள் அடிக்கடி சொல்வார்.

ஒரு காசு -- இரண்டு காசு என்று அப்படி நிதி வசூலித்து வளர்த்ததால்தான், இன்றைக்குத் தி. மு. கழகம் இந்த அளவுக்கு வளர்ந்திருக்கிறது.

பணக்காரர்களாகப் பார்த்துச் சேர்த்து வளர்த்ததால்தான், காங்கிரசுக் கட்சி, பாரிச வாய்வு கண்டவனின் கைபோல் ஆகிவிட்டது! காமராசரும் எவ்வளவோ பாடுபட்டு அதை நிமிர்த்தப் பார்க்கிறார் -- நடக்கிற காரியமா அது?

இந்தத் தொழிலாளர் சங்கம் மற்றவர்களால் அசைக்க முடியாத அளவுக்கு வளர வேண்டுமானால், ஆண்மையோடு -- பொறுப்புணர்ச்சியோடு -- வீரத்தோடு -- அதே நேரத்தில் நிதானத்தோடு இந்தப் பேரவைக்குப் பாதுகாப்பு அளிக்கவேண்டியது தொழிலாளர் ஒவ்வொருவரின் பொறுப்புமாகும்.

மற்றவர்களின் காழ்ப்பு உணர்ச்சி கண்டு நாம் கவலைப்படத் தேவையில்லை; அவர்களுக்கான உத்தரவுகள் டில்லியிலிருந்தும், பம்பாயிலிருந்தும், கல்கத்தாவிலிருந்தும் -- சமயத்தில் சீனாவிலிருந்தும், இரஷ்யாவிலிருந்தும் வந்து கொண்டிருக்கின்றன.

ஆனால், நமக்கான உத்தரவுகள் நம் இதயத்திலிருந்து பிறக்கின்றன; ஆகவே, நமது தொழிற் சங்கத்தை யாராலும் எதுவும் செய்யமுடியாது. இந்தத் தொழிற் சங்கத்திற்குத் தாய்க் கழகம் எப்போதும் பாதுகாப்பளிக்கும்."

மத்தியப் பிரதேச சட்டமன்றத்தில் ஜன சங்க--காங்கிரசு வாக்குவாதம்

காங்கிரசுத் தலைவருக்கு அளித்த ஆடம்பர வரவேற்பின் எதிரொலி

உறுப்பினர்களின் சவால் பற்றி அவைத் தலைவர் எச்சரிக்கை

போபால், ஜூலை 15—

இந்திரா காங்கிரசுத் தலைவர் சங்கர் தயாள் சர்மாவுக்கு கடந்த மாதம் இங்கு அளித்த ஆடம்பர வரவேற்பு சம்பந்தமாக மத்தியப் பிரதேச சட்டமன்றத்தில் ஜன சங்க -- காங்கிரசு உறுப்பினர்களுக்கிடையே கடும் வாக்குவாதம் ஏற்பட்டது.

"காங்கிரசுத் தலைவரின் வரவேற்புக்கும் -- விருந்துக்கும் யார் பண உதவி செய்தது?" என்று ஜன சங்க உறுப்பினர் கேள்வி எழுப்பியதைத் தொடர்ந்து இந்த வாக்குவாதம் துவங்கியது.

காங்கிரசு உறுப்பினர் ஒருவர், ஆர். எஸ். எஸ். தலைவர் கோல்வால்கர்குறித்து சில குற்றச்சாட்டுக்கள் கூறியது, ஜன சங்க — காங்கிரசு உறுப்பினர்களின் காரசாரமான பேச்சுக்களுக்குக் காரணமாகிவிட்டது.

விவாதத்தின் இடையே ஜன சங்க உறுப்பினர் ஒருவர், 'அவைக்கு வெளியில் வாருங்கள்--பார்த்துக் கொள்கிறேன்' என்று கூறிய சவாலை, காங்கிரசு உறுப்பினர்கள் ஏற்றுக் கொண்டனர்.

அவைத் தலைவர் குறுக்கிட்டு, 'இப்படிப்பட்ட பேச்சுக்களை நான் இனி அனுமதிக்கப் போவதில்லை' என்று கூறி, உறுப்பினர்களை எச்சரித்தார்.

ஆந்திரத்திலும் பிச்சைக்காரர் விடுதிகள் ஏற்படும்

ஐதராபாத், ஜூலை 15—

தமிழ்நாட்டைப் பின்பற்றிப் பிச்சைக்காரர்கள் விடுதி கட்ட ஆந்திர அரசு முடிவு செய்திருக்கிறது.

இதுபற்றி ஆந்திரச் சட்டமன்றத்தில் நலத்துறை அமைச்சர் எம். வி. கிருஷ்ணா கூறியதாவது:—

"ஆந்திரத்தில மூன்று பிச்சைக்கார விடுதிகள் கட்டப்படும்; முதலில் தொழுநோய்ப் பிச்சைக்காரர்களுக்கான விடுதி ஏற்படுத்தப்படும்.

'பிச்சை எடுப்பதைத் தடை செய்யும் சட்டம் கொண்டுவரவும் முடிவு செய்யப்பட்டிருக்கிறது."



(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கின்றன?

கழக ஆட்சியாளர்கள் பத்திரிகைகளுக்கெல்லாம் 'போன்' மூலம், 'அதைப் போடாதே -- இதைப் போடாதே; அந்தச் செய்தியை அப்படிப் போடு -- இந்தச் செய்தியை இப்படிப் போடு' என்று மிரட்டுகிறார்களாம்! காமராசரின் மற்றொரு கயிறு திரிப்பு இது!

கழக ஆட்சியாளர்கட்கு இதுதானா அன்றாட வேலை? அப்படி அவர்கள் சொல்லி -- அதன்படி செய்தி வெளியிடும் ஏடுகள் எவை? இந்தப் பட்டியலையாவது காமராசர் வெளியிடுவாரா?

கழக ஆட்சியாளரின் விருப்பப்படிதான் பத்திரிகைகள் செய்தி போடுகின்றன என்றால், கடந்த ஐந்தாம் நாள் நடைபெற்ற அர்த்தால் பற்றியும் -- துப்பாக்கிப் பிரயோகம் பற்றியும் 'தேசிய ஏடுகள்' இப்படியா செய்தி வெளியிட்டிருக்கும்? ஒன்பதாம் நாள் சென்னையில் நடந்த மௌன ஊர்வலத்துன்மீது கல்லெறியப்பட்டு ஊர்வலம் தாக்கப்பட்டது என்று செய்தி வெளியிடப்பட்டிருக்கும்? ஊர்வலத்தில் வந்தவர்கள் கல்லெறிந்தும், சினிமா தியேட்டர்களையும் -- சினிமா பார்க்க வந்தவர்களுடைய கார்களையும் தாக்கிய உண்மைகளை மறைத்து ஊர்வலத்தில் வந்தவர்களைத் தாக்கியதாகச் செய்தி வெளியிட்டு மகிழ்ந்தனவே தேசிய ஏடுகள் -- இதுகூடக் காமராசருக்குத் திருப்தியளிக்கவில்லையா?

தி. மு. கழக ஆட்சியை எதிர்க்க எந்தத் தேசியப் பத்திரிகைக்கும் துணிவு இல்லை என்றால், எழுபத்தொன்று தேர்தலின்போது அத்தனைத் தேசியப் பத்திரிகைகளும் கழக ஆட்சிக்கு எதிராகத் திரண்டு நின்று -- கட்டுப்பாட்டாகக் கழக ஆட்சியை எதிர்த்துத் துஷ்பிரயோகம் செய்தனவே -- அது எப்படி முடிந்தது?

'இந்து'வும், 'தினமணி'யும் கழக அரசுக்கு ஆதரவாகவா எழுதுகின்றன? காமராசரின் இலக்கணப்படி அவை தேசியப் பத்திரிகைகள் அல்லவா? ஒருவேளை, 'நவ சக்தி', 'நாத்திகம்' பாணியில் அந்த ஏடுகள் செய்தி போடவில்லை என்று காமராசருக்குக் கோபம் போலும்! அதனால்தான், அவற்றிற்கு இன்னும் 'துணிவு' இல்லை என்று சாடியிருக்கிறார்!

'நவ சக்தி', 'நாத்திகம்' முதல் 'நடுநிலைப் பத்திரிகை' என்று சொல்லிக் கொள்ளும் ஏடு வரையில், கழகத்தை எதிர்த்துச் செய்தி வெளியிடாத தேசியப் பத்திரிகைகள் உண்டா?

இனி எல்லாத் தேசியப் பத்திரிகைகளும், காமராசருக்கோ அல்லது அவருடைய பிரசாரப் பீரங்கியான 'நவ சக்தி' ஏட்டின் அலுவலகத்திற்கோ அன்றாடம் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு, 'இன்று என்ன செய்தியைப் போடலாம் -- எப்படிக் கயிறு திரிக்கலாம் -- தி. மு. க. அமைச்சர்களை எப்படியெப்படியெல்லாம் பழி சுமத்தித் துஷ்பிரயோகம் செய்யலாம்' என்று கேட்டுவிட்டுச் செய்தி வெளியிடுவது நல்லது; இல்லையென்றால், 'தேசியப் பத்திரிகை' என்று காமராசர் வாயால் நற்சான்று பெற முடியாது; அப்படிக் கேட்காத பத்திரிகைகளெல்லாம், 'கழக ஆதரவுப் பத்திரிகை' என்ற பழியைச் சுமத்தவும் காமராசர் தயங்கமாட்டார்!

இதுதான், அவருடைய குற்றச்சாட்டின் உள்ளடக்கம்!

— மா. செ.

நாவலர் 53-வது பிறந்த நாள் விழா

கலைஞர் -- ம. பொ. சி. -- குன்றக்குடி அடிகளார் மற்றும் தோழமைக் கட்சித் தலைவர்கள் வாழ்த்துரை

சென்னை, ஜூலை 17—

கழகப் பொதுச்செயலாளரும் தமிழகக் கல்வியமைச்சருமான நாவலர் அவர்களின் 53-வது பிறந்த நாள் விழா, நேற்று மாலை திருவல்லிக்கேணி என். கே. டி. கலா மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

விழாவுக்குக் குடிசை மாற்று வாரியத் தலைவர் இராம. அரங்கண்ணல் எம்.எல்.ஏ. தலைமை வகித்தார்.

சூலமங்கலம் சகோதரிகளின் இன்னிசையுடன் விழா தொடங்கியது.

நாவலர் அவர்களை வாழ்த்தி முதல்வர் கலைஞர் -- பேராசிரியர் க. அன்பழகன் -- சிலம்புச் செல்வர் ம. பொ. சி. - அமைச்சர் மன்னை ப. நாராயணசாமி -- சட்டப் பேரவைத் தலைவர் கே ஏ மதியழகன் -- குன்றக்குடி அடிகளார் -- பார்வர்டு பிளாக் கட்சித் தலைவர் மூக்கையா தேவர் எம் பி. -- முஸ்லிம் லீக் கட்சித் தலைவர் அப்துல் சமது எம்.பி. ஆகியோர் பேசினர்.

நாவலர் பிறந்த நாளையொட்டி அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் புகுமுக வகுப்பில் அதிக மதிப்பெண் பெறும் மாணவருக்கு ரூ. 500 ஆண்டுதோறும் பரிசளிக்கும் வகையில் நாவலர் பெயரால் அறக்கட்டளை ஒன்றினை நிறுவிட--சென்னை ஷெரிப் எம். ஏ. எம். இராமசாமி ரூ 5,000 வழங்கினார்.

நாவலரின் சொந்த ஊரான பட்டுக்கோட்டை வட்டாரத்தில், எஸ். எஸ் எல். சி. வகுப்பில் முதலாவதாகத் தேறும் மாணவருக்குப் பரிசளிப்பதற்கென மற்றொரு அறக்கட்டளை நிறுவப்படுவதாகவும் அறிவிக்கப்பட்டது.

இறுதியில் முரசொலி அடியார் எழுதிய 'அண்ணா ஒரு காவியம்' நாடகம் நடைபெற்றது.

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

குத் தலைவணங்கி மரியாதை செலுத்திக்கொண்டுதான் இருக்கிறேன்.

"கடலெனத் திரண்டனர் மக்கள் -- 'கழகத்தின் ஊக்கம்தான் நாங்கள்' என்று சூளுரைத்தனர்" என்று நமது நாவலரும், மற்ற தலைவர்களும் ஜூலை 15-ம் நாள் கூட்டங்களை முடித்துவிட்டுத் திரும்பி வந்து செய்தி கூறும்போது, செந்தேனாக இனிக்கிறது அந்தச் செய்தி!

செயல் வீரனே -- உன் சிரித்த முகத்தை ஒரு முறை பார்க்க வேண்டும்போல் நெஞ்சு துடிக்கிறது!

நீ இருக்க -- உன் நெஞ்சிலே அண்ணன் இருக்க -- 'உனக்கு உடன் பிறப்பு' எனும் பெருமை எனக்கு இருக்க--நாம் எதற்குத்தான் அஞ்சிட வேண்டும்?

ஒன்று மட்டும் மறவாதே -- 'வன்முறை கூடாது' என்பது, யாருக்கோ நாம் செய்கின்ற உபதேசம் அல்ல; நாம் அதனை உணர்ந்து -- அறவழி நடந்து -- அதனையே பிறருக்குச் சொல்கிறோம் என்பதில்தான் நமக்குப் பெருமை! நம்மை வளர்த்த அண்ணனுக்கும் பெருமை! நாம் அமைத்த ஆட்சிக்கும் பெருமை!"

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அறிவகம் அச்சகத்தில் (24, [illegible] செங்குத் தெரு, சென்னை-10) [illegible] வெளியிடப்படுகிறது.